**<u>அசல் வழக்கு எண். 14/2020</u>**

11.03.2025

**பெயர் – சின்னப்பன் (எ) சின்னச்சாமி (Pw2)**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

(1) எனது மனைவி வாதி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களான வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையானவற்றிலும் நான் ஒரு தரப்பினர் என்றால் சரிதான். மேற்கண்ட ஆவணங்களில் கண்டுள்ள சங்கதிகள் உண்மை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணமான 1977 ம் ஆண்டு செய்து கொண்ட பாக ஆவணத்தில் 4 வது தாளில் 5 வது வரியில் சுப்பே கவுண்டர் மகன் பழனிச்சாமி கவுண்டருக்கு பங்கிற்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் க.ச.எண்.497/7 நெ.காலை பு.,ஏ.6.09–ல் பொதுவில் சரிபாதியான பு.ஏ.3.04 ½ ஏக்கர் பூமி என்று மட்டும் குறிப்பிடப்பட்டு எழுதப்பட்டது என்றால் சரிதான். மேற்கண்ட சொத்தில் பூமி வடபுறம், தென்புறம் என்று திசை கண்டு எழுதப்படாமலும், செக்கு பந்தி காணாமலும் தட வசதி கண்டு எழுதப்படாமலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அதன் பின்னிட்டு திசை கண்டு ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் 5 வது தாளில் 18 வது வரியில் எனது வகையராவுக்கு பிரிந்த சொத்துக்களில் க.ச.எண்.497/7 நெ.காலை பு.,ஏ.6.09–ல் பொதுவில் சரிபாதியான பு.ஏ.3.04 ½ ஏக்கர் பூமி என்று மட்டும் குறிப்பிடப்பட்டு எழுதப்பட்டது என்றால் சரிதான். மேற்கண்ட சொத்தில் பூமி வடபுறம், தென்புறம் என்று திசை கண்டு எழுதப்படாமலும், செக்கு பந்தி காணாமலும், தட வசதி கண்டு எழுதப்படாமலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(2) வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி பு.ஏ.3.04 ½ ஏக்கர் பொதுவில் சரிபாதி என்று தான் கண்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள தாவாவில் பக்கம் 3 ல் பத்தி 5 ல் பாக ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ள நிலையில் மேற்படி பாக ஆவணம் இந்து வழக்கப்படி க.ச.எண்.497/7 ல் பு.ஏ.6.90–ல் பொதுவில் சரிபாதி தென்புறம் 3.04 ½ ஏக்கர் நிலம் வேலுச்சாமி கவுண்டர் வாரிசுகளுக்கும், வடபுறம் பு.ஏ.3.04 ½ பூமி பழனிச்சாமி கவுண்டர் பூமிக்கும் பாகம் ஒதுக்கப்பட்டு அவரவர்கள் தனி சுவாதீனம் பெற்றுக்கொண்டுள்ளார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல்

காணப்படாத சங்கதிகளை நான் தாவாவில் புதிதாக தவறுதலாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்துக்கள் வடபுறம், தென்புறம் என்று பிரிபடவில்லை நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(3) வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்படுத்தப்பட்டதற்கு பிறகு 12.10.1977ம் தேதி எனது வகைறாவினர் ஒரு துரைசாமி கவுண்டருக்கு பு.ஏ.3.04 ½ பூமியை குத்தகைக்கு கொடுத்ததாக வா.சா.ஆ.3 ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.3 ஆவணத்தைத் தான் முதன் முதலில் க.ச.497/7ல் பு.ஏ.3.04 ½ பூமிக்கு தென்புறம் சரிபாதி கிழமேல் நீளியாக என்று சொல்லி முதன் முதலாக வா.சா.ஆ.3 ஆவணத்தில் மேற்கண்ட வாசகம் வருகிறது என்றால் சரிதான். மேற்கண்ட வாசகமானது வா.சா.ஆ.2 பாக ஆவணத்தில் காணப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் நானும் ஒரு தரப்பினர் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் பூமி திசை கண்டு பிரிக்கப்பட்டு தவறான சொத்து விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் கண்டுள்ளபடி சொத்தானது பிரிபடவில்லை என்றால் சரியல்ல. பிரிபட்டுள்ளது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் பழனிச்சாமி கவுண்டர் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் மேற்படி ஆவணத்தில் பழனிச்சாமி கவுண்டரின் கையொப்பத்தை மறுத்துள்ள நிலையில் மேற்படி கையொப்பம் பழனிச்சாமி கவுண்டரின் கையொப்பம் என்பதை நிரூபணம் செய்ய கையெழுத்து நிபுணருக்கு எதுவும் மனு செய்யவில்லை என்றால் பழனிச்சாமி கவுண்டர் போட்டதால் தான் நாங்கள் மனு செய்யவில்லை. எனவே மேற்படி அமுலுக்கு வரவில்லை நான் சொத்தை வில்லங்கம் செய்ய வேண்டி வா.சா.ஆ.3 ஆவணத்தை உருவாக்கினோம் என்றால் சரியல்ல. அமுலுக்கு வந்தது, அதனடிப்படையில் மேற்படி சொத்தை குத்தகைக்கு விட்டுள்ளோம்.

(4) வா.சா.ஆ.3 ஆவணத்தில் கண்டுள்ளபடி சொத்தின் சுவாதீனம் துரைசாமி கவுண்டர் வசம் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. துரைசாமி கவுண்டர் தான் 10 வருடம் வரை ஓட்டினார். அவர் விடுதலை ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார். துரைசாமி கவுண்டர் பூமியை ஓட்டி வந்தார் என்பதை நிரூபணம் செய்ய துரைசாமி கவுண்டர் பெயரில் செலுத்தப்பட்ட கந்தாய ரசீது உள்ளிட்ட வருவாய் துறை ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் குத்தகைக்கு விட்டுள்ளோம் அதனால் மேற்படி

ஆவணங்களில் அவர் பெயர் வராது. வா.சா.ஆ.3 ஆவணம் ஏற்படுத்தப்பட்தற்கு பிறகு ஒரு மாதம் கழித்து கடந்த 15.11.1977 ம் தேதி எனது பாட்டி மாராத்தாள், எனது பெரியம்மா, எனது அம்மா வகையறாக்கள் சேர்ந்து ஏற்கனவே எனக்கு வந்த பொதுவில் சரிபாதியான பு.ஏ.03.04 ½ ஏக்கர் பூமியையும், இதர பூமிகளை வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி பாகம் செய்து கொண்டோம் என்றால் சரிதான். மேற்கண்ட பு.ஏ.03.04 ½ ஏக்கர் பூமியையும் வேறு பூமிகளையும் அவரவர் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட பூமிகளை அவரவர் அன்றைய தேதியிலேயே சுவாதீனம் எடுத்துக்கொண்டு அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். எனது தகப்பனார் வேலுச்சாமி கவுண்டருக்கு வந்த பொதுவில் சரிபாதி பு.ஏ.03.04 ½ ஏக்கர் பூமியில் பொதுவில் சரிபாதி 1.50 ½ ஏக்கர் எனது பெரியம்மா வகையறாவான குப்பாத்தாள் வகையறாவும், மற்றொரு பொதுவில் சரிபாதியான 1.50 ½ ஏக்கர் பூமியை எனது தாயார் வகையறாவுக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால் குப்பாத்தாள் வகையறாவுக்கு க.ச.எண்.497/5, 497/10, 499/2 ஆகியவற்றை அவர்களுக்கு கொடுத்துவிட்டு. க.ச.497 பூமியை நாங்கள் வைத்துக்கொண்டோம். நான் மேற்சொன்ன சங்கதிக்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அது விடுதலை ஆவணம் ஆகும். வா.சா.ஆ.6 ஆவணமான விடுதலை ஆவணத்தில் நான் மேற்சொன்ன சங்கதிகள் காணப்படுகிறதா என்றால் உள்ளது. நான் மேற்சொன்ன குப்பாத்தாள் வகையறாவுக்கு க.ச.எண்.497/5, 497/10, 499/2 ஆகியவற்றை அவர்களுக்கு கொடுத்துவிட்டு. க.ச.497 பூமியை நாங்கள் வைத்துக்கொண்டோம் என்ற வாசகம் காணப்படவில்லை என்றால் சரியல்ல.

(5) நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் நான் சொன்னவாறு எதுவும் வா.சா.ஆ.6 ஆவணத்தில் காணப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சங்கதி சம்மந்தமாக ஆவணங்கள் என்னிடமும் உள்ளது, குப்பாத்தாளிடமும் உள்ளது. என்னிடம் உள்ள ஆவணங்களும், குப்பாத்தாள் வசம் உள்ள ஆவணங்களும் எங்களிடம் இருந்தும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகம் இல்லை. நான் சொன்னபடி எந்த ஆவணங்களும் இல்லை அவ்வாறு இருந்திருந்தால் நான் அதை இந்த வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 பாக ஆவணத்தின் 6 வது தாளில் 16 வது மற்றும் 17 வது வரி வரை க.ச.எண்.497/7 நெ.காலை பு.ஏ.6.09 ல் பொதுவில் சரிபாதி பு.ஏ.03.04 ½ இதில் பொதுவில் சரிபாதி 1.52 ¼ எனது பெரியம்மாள் குப்பாத்தாள்

வகையறாவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளதில் கண்டுள்ளது என்றால் சரிதான். க.ச.எண்.497/5, 497/10, 499/2 ஆகியவற்றை அவர்களுக்கு கொடுத்துவிட்டு. க.ச.497 பூமியை நாங்கள் வைத்துக்கொண்டோம். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(6) வா.சா.ஆ.5 பாக ஆவணத்தில் 8 வது தாளில் கீழிருந்து மேலாக 11 வது வரியில் எனக்கும், எனது தாயார், எனது சகோதரிக்கும் க.ச.எண்.497/7 நெ.காலை பு.ஏ.6.09 ல் பொதுவில் சரிபாதி பு.ஏ.03.04 ½ இதில் பொதுவில் சரிபாதி 1.52 ¼ பூமியானது எங்களுடைய வகையறாவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளதில் கண்டுள்ளது என்றால் சரிதான். எனது பெரியம்மா குப்பாத்தாள் வகையறாவும், எனது வகையறாவிற்கு பிரிந்த பொதுவில் சரிபாதியான தலா 1 ½ ஏக்கர் பூமியானது வா.சா.ஆ.5 ஆவணத்தில் பூமி செக்கு பந்தி காணாமலும், வடபுறம், தென்புறம் என்று பூமி திசை கண்டு எழுதப்படாமலும், தட வசதி கண்டு எழுதப்படாமலும் உள்ளது என்றால் சரிதான். உண்மையிலேயே குத்தகை பத்திரமான வா.சா.ஆ.3 ல் பு.ஏ.3.04 ½ பூமியானது தென்புறம் சரிபாதி கிழமேல் நீளியாக என்று கண்டு எழுதப்பட்டுள்ளது உண்மை எனில் பூமியும் திசை கண்டு பிரிக்கப்பட்டது உண்மை எனில் நான் செய்து கொண்ட வா.சா.ஆ.5 பாக பத்திரத்தில் மேற்கண்டவாறு வாசகங்கள் காண்ப்பட்டு எழுதப்பட்டிருக்கும் பூமி பிரிபடாமல் பொதுவில் அனுபவித்து வந்த காரணத்தினால் தான் அவ்வாறு எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. 1977 ம் ஆண்டே பூமி திசை கண்டு எழுதப்பட்டுள்ளது. எந்த ஆவணத்தில் அவ்வாறு காணப்படுகிறது என்றால் துரைசாமிக்கு குத்தைக்கு விட்ட ஆவணமான வா.சா.ஆ.3 ஆவணத்தில் திசை கண்டு எழுதப்பட்டுள்ளது. அதில் பழனிச்சாமி கவுண்டர் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(7) மொத்த பூமியான பு.ஏ.6.09 க்கு பதிவான முதல் பத்திரமான வா.சா.ஆ.2 பாக ஆவணத்திலும், தற்போது வா.சா.ஆ.5 ஆவணத்திலும் திசை கண்டு பூமி எழுதப்படாமல் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பெரியவர்கள் பொதுவாக அனுபவித்து வந்தார்கள் அதனால் எழுதவில்லை நாங்கள் எங்கள் வசதிக்காக பிரித்து 1977 ம் ஆண்டு குத்தகைக்கு விட்ட போது எழுதிக்கொண்டோம். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 பாக ஆவணத்தில் வா.சா.ஆ.3 குத்தகை ஆவணத்தை பற்றி குறிப்பிடவில்லை என்றால் ஞாபகம் இல்லை. உண்மையிலேயே குத்தகை ஆவணம் துரைசாமி கவுண்டருக்கு சுவாதீனம் கொடுத்து குத்தகைக்கு

விட்டிருந்தால் மேற்படி ஆவணத்தின் சங்கதிகளைப் பற்றி பாக ஆவணத்தில் குறிப்பிட்டிருப்போம் மேற்படி ஆவணம் பொய் என்பதால் தான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. கடந்த 12.10.1977 ம் தேதிய வா.சா.ஆ.3 குத்தகை ஆவணத்தை ரத்து செய்யாமல் தான் 15.11.1977 ம் தேதிய வா.சா.ஆ.5 பாக ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரிதான்.

(8) வா.சா.ஆ.3 குத்தகை ஆவணத்தை ரத்து செய்யாமல் தான் 15.11.1977 ம் தேதிய வா.சா.ஆ.5 பாக ஆவணத்தை ஏற்படுத்தியது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. செல்லும். வா.சா.ஆ.5 பாக ஆவணத்தில் 10 வது தாளில் 17 வது வரியில் சாட்சிகள் என்ற இடத்தில் சீலநாயக்கன்பட்டி எஸ்.பழனிச்சாமிக் கவுண்டர் த/பெ.சுப்பே கவுண்டர் என்று காணப்படுகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 பாக ஆவணத்தில் உள்ள சங்கதிகள் பழனிச்சாமி கவுண்டருக்கு தெரிந்து தான் சாட்சி கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 பாக ஆவணத்தில் உள்ள சங்கதிகளை பழனிச்சாமி கவுண்டருக்கு தெரிவித்து அவர் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 குத்தகை ஆவணத்தில் பு.ஏ.3.04 ½ ஏக்கர் பூமி ஏற்கனவே தென்புறம் சரிபாதி கிழமேல் நீளியாக என்று திசை கண்டு பிரிபட்டுள்ளதும், அதில் பழனிச்சாமி கவுண்டர் சாட்சி கையொப்பமிட்டுள்ளார் என்று குறிப்பிடும் நிலையில் வா.சா.ஆ.5 ஆவணத்தில் பூமி பிரிபடாமல் பொதுவில் சரிபாதி என்று கண்டுள்ளதும் மேற்கண்ட 2 ஆவணத்திலும் பழனிச்சாமி கவுண்டர் தெரிந்தே கையொப்பம் செய்துள்ளார் என்று சொல்லியிருப்பதும் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல.

(9) வா.சா.ஆ.1 பாக ஆவணத்தில் சுப்பே கவுண்டர் மகன் பழனிச்சாமி கவுண்டருக்கு பு.ஏ.6.09 ல் வந்த பொதுவில் சரிபாதி பு.ஏ.3.04 ½ ஏக்கர் பூமியை அவரும் அவரது மகன்களும் கடந்த 16.04.1987 ம் ஆண்டு பி.வா.சா.ஆ.3 ஆவணத்தின்படி பாகம் செய்து கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பாக ஆவணத்தில் பு.ஏ.3.04½ பூமி பழனிச்சாமிக் கவுண்டருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் தாக்கல் செய்த விபரப்பத்திரிக்கையை படித்துப் பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். பு.ஏ.6.09 பூமியை சுப்பே கவுண்டர் மகன் பழனிச்சாமி கவுண்டருக்கு யார், யாருக்கு எந்த ஆவணத்தின் மூலம் வந்தது என்பதை படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். ஆனால் அது பற்றி நான் சொல்ல முடியாது.

நான் வழக்கு விவரம் நன்கு தெரிந்தும் நான் வழக்கிற்காக பொய்யாக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(10) வா.சா.ஆ.5 பாக ஆவணத்தில் எழுதிய பிறகு கடந்த 07.10.1987ம் ஆண்டு துரைசாமி கவுண்டருக்கு குத்தகைக்கு கொடுத்ததாக சொல்லப்படும் வா.சா.ஆ.3 ஆவணத்தை ரத்து செய்து 07.10.1987ம் ஆண்டு குத்தகை ரத்து ஆவணம் வா.சா.ஆ.4 ஆக எனது மனைவி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். குத்தனை ரத்து ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து சங்கதிகளும் உண்மை என்றால் சரிதான். குத்தகை ரத்து ஆவணத்தில் நானும் ஒரு தரப்பினர் என்றால் சரிதான். குத்தகை ரத்து ஆவணத்தில் உள்ள வாசகங்களை படித்து பார்த்து ஒப்புக்கொண்டு தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 குத்தகை ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள தவறான சொத்து விவரம் தான் வா.சா.ஆ.5 ஆவணத்தில் காணப்படுகிறது என்றால் சரியல்ல. குத்தகை ரத்து ஆவணத்தில் கடந்த 15.11.1977ம் தேதிய வா.சா.ஆ.2 பாக ஆவணத்தைப் பற்றி எந்தவிதமான சங்கதிகளும் குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிடவில்லை. எங்கள் பூமி என்பதால் குறிப்பிடவில்லை.

(11) குத்தகை ரத்து ஆவணத்தில் 3வது பக்கத்தில் கடைசி பத்தியில் இந்த சொத்துக்களைப் பொறுத்து ---- வழக்குகளை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறானது ஆகும். நான் மேற்படி விவரம் தெரிந்து தான் கையெழுத்துசெய்து விட்டு தற்போது வழக்கிற்காக மாற்றி குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. பு.ஏ.3.04 ½ பூமியானது எங்கள் வசம் இருந்ததாக துரைசாமி கவுண்டர் மீது வழக்கு தாக்கல் செய்தும், துரைசாமி கவுண்டர் சுவாதீனம் அவர் வசம் இருந்ததாக எங்கள் மீதும் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளதாக மேற்படி ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்பதால் பு.ஏ.3.04 ½ சுவாதீனம் துரைசாமி கவுண்டர் வசம் இல்லை என்பதை நானே ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. எந்த வழக்கும் எங்கள் இருவருக்கும் 1977ம் ஆண்டும் வழக்கு நிலுவையில் இருந்தது கிடையாது. இரு தரப்பிலும் வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டு மேற்படி ஆவணம் ஏற்படுத்தினோம் என்றால் வழக்கு எதுவும் இல்லை. வா.சா.ஆ.3 ஆவணத்தின் படி துரைசாமி கவுண்டர் வசம் சுவாதீனம் ஒப்படைக்கவில்லை அது பொய்யாக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால்

சரியல்ல. துரைசாமி கவுண்டர் வசம் இருந்தது. அவர் நீதிமன்றத்தில் குத்தகை செலுத்திய ரசீதும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்பது ஞாபகம் இல்லை.

(12) குத்தகை சுமாராக எவ்வளவு துரைசாமி கவுண்டர் செலுத்தினார் என்றால் வருடம் ரூ.1000/– குத்தகை தொகை நீதிமன்றத்தில் குப்பாத்தாள் மற்றும் செல்லம்மாள் பெயரில் கட்டினார். நான் வழக்கறிஞர் வைத்து மனு தாக்கல் செய்து மேற்படி தொகையை பெற்றுக்கொண்டோம் என்றால் என் அம்மா தான் பெற்றுக்கொள்வார். 1977 ம் வருடம் முதல் 1987 ம் வருடம் வரை அவ்வாறு நீதிமன்றத்தில் குத்தகை தொகை செலுத்தினார். எனக்கும், துரைசாமி கவுண்டருக்கும் பு.ஏ.3.04 ½ ஏக்கரை பொறுத்து கருத்து வேறுபாடுகள், சண்டை, சச்சரவுகள் இருந்ததா என்றால் இல்லை. 1987 ம் ஆண்டு தான் உடுமலை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் குத்தகை வழக்கை துரைசாமி கவுண்டர் வாபஸ் பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். வழக்கு எண். ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.3 குத்தகை ஆவணம், குத்தகை ரத்து ஆவணம் தாவாச் சொத்தில் வில்லங்கம் ஏற்படுத்த வேண்டி உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல.

தொடர் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.03.11 10:43:00 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்